அவர்கள் சொன்னார்கள். ஆனால் அவை தனித் தனியாகத் தான் செயல்படுகின்றன. எந்த இடத்தில் அப்படிச் செயல்படு கிறது என்பதை உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டால் அதைத் தனித்தனியாக செயல்படச் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கை களை அரசு மேற் கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடி வுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. உரிமைப் பிரச்சினை

'தினமலர்' மீது—தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினை :—

21-2-1984 ஆம் நாளிட்ட சென்னைப் பதிப்பு "தினமலர்" நாளேட்டில் 4 ஆவது பக்கத்தில் ஒரு கருத்துப் படம் பிரசுரிக்கப் பட்டு இருந்தது. உறுப்பினர்கள் மனம் புண் படக்கூடிய வகை யில் அக் கருத்துப்படம் பிரசுரிக்கப்பட்டிருந்தது குறித்த பிரச்சினையை 23-2-1984 ஆம் நாளன்று திரு. ஆர். கிருஷ்ணன் அவர்கள் அவையில் எழுப்பினார்கள். உறுப்பினர்கள் மனம் புண்படக் காரணமாக அந்த கார்ட்டூன் அமைந்து விட்டதற்காக ஆசிரியர் வருத்தத்தைத் தெரிவித்து, அந்த நாளிதழில் 23-2-1984 ஆம் நாள் பதிப்பின் 3 ஆம் பக்கத்தில் வெளியிடப்பட்டு இருந்தது. தவறுக்கான வருத்தத்தை முதல் பக்கத்திலே போட வேண்டும் என்று உறுப்பினர்கள் சிலர் பேரவையில் கருத்துக் களைத் தெரிவித்தனர். வருத்தத்தை முதல் பக்கத்திலேயே, போட வேண்டும் என்றும், அவர்கள் எப்படி போடுகிறார்கள் என்பதை பார்த்துவிட்டு என்னுடைய தீர்ப்பை வழங்குவதாக வும் தெரிவித்திருந்தேன்.

அந்நாளேட்டின் ஆசிரியர் தனிப்பட வருத்தம் தெரிவித்து ஒரு கடிதத்தினையும் அனுப்பியுள்ளார். அக் கடிதத்தில் பின் வருமாறு எழுதியுள்ளார். Since some of the Members of Legislature have expressed their disPleasure over the Publication of two cartoons in the issue of our daily, dated 20th and 21st of this month, I would like to clarify that no motive was intended behind that Publication. Kindly accept my regret.

மேலும் 24-2-1984 ஆம் தேதிய பதிப்பின் முதல் பக்கத்தில் 'வருந்துகிறோம்' என்ற தலைப்பிட்டு வருத்தத்தினைத் தெரிவித்து, இழிவு படுத்தும் நோக்கம் இல்லை என்றும் பத்திரிகை வெளியிட்டுள்ளது. பேரவையில் மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கு இணக்கமாக இந்தப் பத்திரிகையின் ஆசிரியர் வருத்தத்தை முதல் பக்கத்தில் வெளியிட்டுள்ளமைக்கு என் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே இப் பிரசசினையில் மேல் நடவடிக்கை தேவையில்லை என்று கருதுகிறேன்.

மேலும் அவையின் கண்ணியத்தைக் குறைக்கும் வகையிலோ அல்லது உறுப்பினர்களை இழிவு படுத்தியோ கருத்துப் படங்கள் வெளியிடுவதைத் தவிர்க்க வேண்டும் என்று பத்திரிகைகளைக் கேட்டுக் கொண்டு இப் பிரச்சினையை இத்துடன் விட்டு விடலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

### 4. அறிவிப்பு.

### ஆளுநரிடமிருந்து வந்துள்ள செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து 25-2-1984 ஆம் தேதியிட்ட கீழ்க்கண்ட செய்தி வரப் பெற்றது என்பதை பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"I have received with satisfaction your Resolution thanking me for my Address on the 13th February 1984 to the Members of the Legislature".

### 5. தகவல் கோரல்.

அ. மழையினால் தென் மாவட்டங்கள் பாதிக்கப்பெற்றுள்ளது,

திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கும், நேற்றைய முதல் நாளும் பொழிந்த பெரு மழையின் காரணமாக விளாத்திக்குளம், தூத்துக்குடி, ஆத்தூர், புன்னக்காயல், நெல்லை, பாளையங்கோட்டை ஆகிய பகுதிகள் பாதிக்கப்பட்டு. அந்த வெள்ளத்தினால், உயிரும், உடமைகளும் பாதிக்கப்பட்டதாக நாம் பத்திரிகையின் வாயிலாக அறிகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 54 ஆவது விதி இருக்கிறது. அந்த விதியின் கீழ் அறிப்புக் கொடுக்கலாம்.